**செய்தி வெளியீடு எண் : 774** **நாள்: 14.05.2022**

# கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் இசையாசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி சென்னையில் நடைபெற்றது

கலை பண்பாட்டுத்துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிகளின் விரிவுரையாளர்கள் மாவட்ட அரசு இசைப்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் சென்னையில் நடத்தப்பட்டு வருகிறது. பரதநாட்டிய ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாமில் பத்மா சுப்பிரமணியம், பார்வதி ரவிகண்டசாலா, மீனாட்சி சித்தரஞ்சன் ஆகிய பரதநாட்டியக் கலைஞர்கள் செயல்முறை நிகழ்ச்சி வழங்கினார்கள்.

குரலிசை ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் 13.05.2022 மற்றும் 14.05.2022 ஆகிய நாட்களில் நடைபெற்றது. முதல் நாள் பயிற்சியில் டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் எஸ்.சௌம்யா அவர்கள் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் முறைகளை விளக்கினார். தொடர்ந்து முனைவர் சியாமளா வினோத் அவர்கள் குரல்வளப் பயிற்சிகளை வழங்கினார்.

நிறைவு நாளில் முனைவர் ராஜாராமன் மற்றும் முனைவர் வானதி ரகுராமன் ஆகியோர் தொல்காப்பிய காலம் தொடங்கி பாரதியார் காலம் வரை இசையின் வளர்ச்சி முறைகளையும் பாரதியாரின் அசல் மெட்டுகளில் அமைந்த பாடல்களையும் விளக்கினார்கள். தொடர்ந்து திரு டி.எம்.கிருஷ்ணா அவர்கள் இசைக் கல்வி முறைகளின் சாதக பாதங்களை விளக்கியும் இசையினை ஆர்வமாக கற்றுக் கொள்ளும் வகையில் ஆசிரியர்கள் பணிகளை விளக்கினார்.

இப்பயிற்சி முகாமில் தமிழகத்தில் உள்ள இசைக்கல்லூரிகளின் விரிவுரையாளர்கள் மற்றும் இசைப்பள்ளிகளின் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in